Clr.No.19

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
------

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUVOTTIYUR</u>**

| | | |
|---|---|---|
| **Calendar** | : | |
| **Miscellaneous** | : | |
| **Preliminary Register** | : | **Case No. CC. 35/2024** |
| **Sessions** | : | |
| | | **Prosecution** |
| **Deposition of witness for** | : | **PW 1 /LW 1** |
| **Name** | .. | திருமதி. கவிதா |
| **Father's/Husband's Name** | .. | திரு. முத்துக்கிருஷ்ணன் |
| **Village** | | |
| **Taluk** | .. | |
| **Caste** | .. | |
| **Calling** | .. | |
| **Religion** | .. | |
| **Age** | .. | **36** |

**Date: 11/08/2025**

**(Solemnly affirmed before this court under act X of 1969)**

எதிரி 1. நீதிமன்றத்தில் ஆஜர். எதிரி 2, 3 நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. வழக்கறிஞரால் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

முதல் விசாரணை:-

1. நான் தற்போது எண்.155, 5 வது தெரு, அசிஸ் நகர், மாதவரம் என்ற முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது கணவர். கடந்த பிப்ரவரி 20.02.2014 அன்று எனக்கும் ஆஜர் எதிரிக்கும்

திருமணம் நடந்தது. திருமணத்தின் போது எனக்கு சுமார் 30 சவரன் மற்றும் சீர்வரிசை அளித்தார்கள். திருமணத்திற்கு பிறகு 1 வாரம் வரை நன்றாக வாழ்ந்து வந்தோம். பிறகு எனது மாமியார், மாமனார் மற்றும் எனது கணவர் கார் வாங்குவதற்காக எனது 20சவரன் நகையை கேட்டார்கள். நான் கொடுக்க மறுத்துவிட்டேன்.

2. நாங்கள் இருவரும் ஒரே வீட்டில் இருந்தாலும் நாங்கள் தனித்தனியாக தான் வாழ்ந்தோம். அவர்கள் கேட்ட நகையை கொடுக்காத்தால் தினமும் என்னை அடித்து வீட்டை விட்டு வெளியே செல்லுமாறு கூறுவார்கள். எனக்கு சரியாக சாப்பாடு போடவில்லை. சாப்பாட்டிற்கு காசு கொடுக்கமாட்டார்.

3. ஆஜர் எதிரியிடம் சமாதானம் பேச சென்ற போது உங்கள் மகளை நீங்கள் வீட்டிற்கு அழைத்துச்சொல்லுங்கள் என்று ஆஜர் எதிரி மற்றும் அவரது பெற்றோர் கூறினார்கள்.

4. என்னை எனது அண்ணனுடன் தொடர்பு படுத்தி அசிங்கமாக பேசினார்கள். பிறகு ஏப்ரல் 9.04.2023 ம் வருடம் திரும்பவும் நகையை கேட்டார்கள். நான் கொடுக்க மறுத்துவிட்டேன். என்னையும் எனது அம்மாவையும் தேவிடியா என்று பேசினார்கள். அஜர் எதிரி என்னை கையால் அடித்து வெளியே சென்ற பின் இருசக்கர வாகனத்தை வைத்து மோதினார்.

5. எனது மாமனார் மற்றும் மாமியாரும் என்னை கையால் அடித்தார்கள். இந்த சம்பவம் குறித்து போலீசில் புகார் கொடுத்தேன்.

நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (புகார் மனு அ.சா. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது). போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிர் தரப்பு குறுக்கு விசாரணை

6. உங்களது திருமணம் பெற்றோர்களால் பார்த்து நிச்சயக்கிப்பட்ட திருமணம் என்றால் சரிதான்.

7. உங்களது திருமணம் எப்போது நடைபெற்றது 20/02/2014 அன்று நடைபெற்றது. திருமணம் நடைபெற்று 11 ஆண்டுகள் ஆகிவிட்டது என்றால் சரிதான்.

8. திருமணத்திற்கு முன் சீர்வரிசை பேசும் போது பெரியோர்கள் தான் பேசினார்கள் என்றாலும் நீங்கள் இல்லை என்றால் சரியல்ல நானும் உடன் இருந்தேன்.

9. உங்களுக்குஎத்தனை குழந்தை உள்ளது என்றால் ஒரு குழந்தை உள்ளது. குழந்தை பிறந்த தினம் 06.05.2015 . தற்போது நான் குடியிருப்பது சொந்த வீடா, வாடகை வீடா என்றால் சொந்த வீடுதான்.

10. அந்த வீடு மாமனார் பெயரில் உள்ளதா அல்லது உங்களது கணவர் பெயரில் உள்ளதா என்றால் மாமனார் பெயரில் தான் உள்ளது. மாமனாரும், நீங்களும் தனித்தனி போசனில் தான் உள்ளீர்கள் என்றால்

சரிதான். அவருக்கு சுமார் 73 வயது இருக்கும் என்றால் சரிதான். மாமியாருக்கு 65 வயது இருக்கும் என்றல் சரிதான்.

11. உங்களது மாமனாரும் மாமியாரும் தனியாக சமைத்து சாப்பிட்டுக்கொள்கிறார்கள் என்றால் சரிதான். நீங்கள் வேலைக்கு செல்கிறீர்களா என்றால் இல்லை நான் வீட்டில் தான் இருக்கிறேன்.

12. உங்களது மாமனார் எதாவது வேலை பார்க்கிறார் என்றால் சரிதான். அவர் நாங்கள் பாக்கெட் போட்டு கொடுப்போம் அவர் சென்று விற்று வருவார்.

13. உங்களது மாமனாருக்கு ஒத்தாசையாக மாமியாரும் இருக்கிறார் என்றால் சரிதான். உங்களது கணவர் பணம் கொடுத்துதான் அவர்கள் வாழ வேண்டும் என்ற அவசியம் இல்லை என்றால் சரிதான்.

14. உங்களது கணவரின் வருமானம் மூலம் தான் நீங்களும் உங்களது குழந்தையையும் பராமரிக்கிறார் என்றால் சரியல்ல. எங்களது பராமரிப்பை எனது பெற்றோர் வீட்டில் தான் எங்களை பார்த்துக்கொள்கிறர்கள்.

15. உங்களுக்கு 11 வருடங்கள் ஆகின்றது என்றாலும் உங்களை உங்களது பெற்றோர் வீட்டில் தான் பார்த்துக்கொள்கிறார்களா என்றால், ஒரளவுக்கு தான் பார்த்துக்கொண்டார்.

16. 9.04.2023 அன்று எத்தனை மணிக்கு உ ங்களை அடித்தார்கள் என்றால், 8 மணியில் இருந்து சண்டை நடந்தது 9 மணிக்கு என்னை அடித்தார்கள். அப்போது அவருடைய அம்மா, அப்பாவும் இருந்தார்கள் அவர்களுக்கு எங்களுடைய பாப்பாதான் தகவல் கொடுத்தார். தகவலின் பேரில் என்னுடைய தாய் மற்றும் சகோதர் வந்தார்கள்.

17. 30 சவரண் நகையை பற்றி நான் என்னுடைய புகாரிலோ போலீஸ் விசாரணையிலோ சொல்லவில்லை என்றாலும் தற்பொழுது தான் வழக்கிற்காக சொல்கிறேன் என்றால், சரியல்ல நான் என்னுடைய புகாரில் சொல்லியுள்ளேன்.

18. நான் சொல்வது போல் சங்கதிகள் என்னுடைய புகாரில் இல்லை என்றாலும் என்னிடத்தில் பெறப்பட்டது வாக்குமூலம் தான் புகார் அல்ல என்றாலும் சரிதான்.

19. நீங்கள் கொடுத்துள்ள வாக்குமூலம் தவிர புகார் மனு எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல நான் புகார் மனு கொடுத்துள்ளேன்.

20. சண்டையில் அடிப்பட்டதாக சொல்லியுள்ளேன் காயங்கள் எற்பட்டதா என்றால் சரிதான். காயங்கள் முகம் மற்றும் பின்பகுதியில் ஏற்பட்டது.

21. இவை அனைத்தையும் நான் மருத்துவரிடம் சொல்லியிருந்தால் மருத்துவர் அவ்வாறு காயச்சான்று வழங்கியிருப்பார். அவ்வாறு

இல்லாததால் தான் மருத்துவர் சான்றளிக்கவில்லை என்றால் மருத்துவர் சொல்லியுள்ளார்.

22. மருத்துவ சான்றுகளை நான் காவல் நிலையத்தில் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். போலீசார் உங்களை விசாரணை செய்த போது எனக்கு காயம் பட்ட விஷயங்களை சொல்லியுள்ளேனா என்றால் அரை மயக்கத்தில் இருந்தேன் சொன்னோன்.

23. நீங்கள் திருமணம் ஆன பின்பு ஒரு வருடம் கூட்டுக் குடும்பமாக தான் இருந்தோம். அதன் பின்பு பக்கத்து வீட்டில் குடியிருந்தோம். அது என்னுடைய மாமனார், மாமியார் வீடு அல்ல.

24. அதன் பின்னிட்டு எங்கு வசித்தீர்கள் என்றால் மாத்தூர் மற்றும் மணலியில் 5 வருடங்கள் தனி வீடு எடுத்து தங்கியிருந்தோம். குழந்தையை ஒரு வருடம் பார்க்க வராத்தால் நாங்கள் சண்டை எற்பட்டு தனிக்குடித்தனம் சென்றுவிட்டோம்.

25. குழந்தை பிறந்த தகவலை நான் என்னுடைய வீட்டுகாரருக்கு சொன்னேனா என்றால் போன் செய்தேன் போன் சுவிட்ச் ஆப் செய்திருந்தது. பிறகு என் வீட்டார் அவர்களுடைய வீட்டாருக்கு தகவல் கொடுத்தார்கள்.

26. தகவல் கேள்வி பட்டு அவர்கள் வந்த போது நீங்கள் தான் குழந்தையை அவர்களுக்கு காட்டவில்லை என்றால் சரியல்ல. அந்த

பிரச்சனையில் உங்களது கணவரோ, மாமனார் மற்றும் மாமியார் உங்களை தகாதவார்த்தைகளால் திட்டவில்லை என்றாலும் நீங்கள் தான் வீட்டுக்குள் நடந்த பிறச்சனையை எட்டுக்கட்டி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

27. அதே போல் நீங்கள் எவ்வளவு எடுத்து வந்தீர்கள் என்று உங்களுடைய கணவருக்கு தெரியாது என்றாலும் தனிகுடித்தனம் செல்ல வேண்டும் என்பதாலும் நான் இவ்வாறு புகார் அளித்தேன் என்றால் சரியல்ல.

28. இந்த வழக்கின் கணேஷ் என்பவர் எனது தம்பி, காளியம்மாள் என்பவர் என்னுடைய தாயார். அவர்கள் பட்டியல் சாட்சிகள் 2 மற்றும் 3 ஆவர்கள். சாட்சி 4. எனது தந்தை ஆவார் சாட்சி 5. ஆசை தம்பி என்னுடைய அண்ணன். அவர்கள் அனைவரும் என்னுடைய குடும்பத்தார்கள் என்றால் சரிதான்.

29. இவ்வழக்கிற்காக தவறான சங்கதிகளை தந்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

K KARTHIK Digitally signed by K KARTHIK Date: 2025.08.11 14:53:18 +0530

நீதித்துறை நடுவர்,

திருவொற்றியூர்